
# திசை

## மாணவரின் தோழன்

கல்வி,கலை,அறிவியல்,தொழில்நுட்பச் சஞ்சிகை

வெளியீடு 2    2010 ஆகஸ்ட், செப்ரம்பர்



அண்மையில் சூரியனில் திடீர் வெடிப்பு நிகழ்ந்தபகுதி



வித்தியாசமான தோற்றமுடைய புதிய இனம்



அண்மையில் வெள்ளிக்கிரகத்தில் நிகழ்ந்த விபரீதம்

வெளியீடு-திசை வெளியீட்டுக்குழு, ஜூலை 2010    விலை 30.00

திசை வெளியீடு-2
திசை இரண்டாவது இதழ்
சஞ்சிகையின் பெயர்: *திசை*
ஆசிரியர் : *சி.சத்தியபாமா*
கணிணியில் சஞ்சிகை வடிவமைப்பு, ஓவியங்கள் - *சக்தி*
வெளியீடு : 'திசை'
*வெளியீட்டுக்குழு*
அச்சகம் : *மதி கலர்ஸ்*

ஆசிரிய ஆலோசகர்கள்

*திருவாளர் தி. யோகசாமி*
(ஓய்வு பெற்ற அதிபர்)
*திருமதி அ. மலர்விழி*
(B.A Hons,PGDE)
*திருவாளர் க. சீனித்தம்பி*
(தமிழ்ப் புலவர்)
*திருவாளர் T. அசோகலிங்கம்*
(B. Com, PGDE, M. Ed)
(S.L.T.S--1)

*திசையுடன் தொடர்புக்கு முகவரி,*
'திசை'
ஆசிரியர் சி. சத்தியபாமா
கருணாநிதி ச.ச. நிலையம்,
வல்வெட்டி,
வல்வெட்டித்துறை.

**T.P 0775241723**

*உள்ளே......*

1. திசையின் நோக்கம்
1. *நெஞ்சை அள்ளும் சிலம்பு*
2. *விண்வெளி ஆய்வறிவியல் -கட்டுரை*
3. *மாணவர் ஆக்கிய பக்கங்கள்*
*அ) சுனாமி-கவிதை*
*ஆ)HEAVEN OF HELL -poem*
*இ) மலருமா மனித நேயம் -கவிதை*
*ஈ) சிறுவர் கைவண்ணத்தைப் பாராட்டுவோம் -சித்திரம்*
*உ) உயிர் மூச்சு-சிறுகதை*
4. *பொது அறிவு, நுண்ணறிவுப் போட்டி இல-1*
5. *ஆரம்பக்கல்வி மணவருக்காக விரியும்......*
*அ) இராஜ்பவன்-சுயசரிதை*
*ஆ) புதிய விடுகதைகள்*
*இ) தங்க நிலவு-சிறுவர் பாடல்*
*ஈ) மரங்கொத்தியின் ஆய்வு -சிறுகதை*
*உ) நான் கண்ட காலைக் கடற்கரை -கட்டுரை*
6. *சுருக்கம் எழுதும் போது கவனிக்க வேண்டியவை*
7. *வளி மாசடைதலும் அதைத் தவிர்க்கக் கூடிய யுக்திகளும் -கட்டுரை*

# திசை வெளியீட்டின் நோக்கம்

ஒவ்வொரு மாணவனுக்கும் தனது எதிர்காலத்தைப்பற்றி ஒரு கனவு இருக்கும். அவர்களது பருவத்துக்கேற்ப அது சற்று வித்தியாசப்படலாம். இருப்பினும் அவற்றுள் ஒரு பொதுவான விடயம் உள்ளது. அது தமது வாழ்க்கை இனிமை நிறைந்ததாக அமைய வேண்டுமென்பதாகும். கட்டிளமைப்பருவத்தைக் கடக்கயில்,ஓரளவு சிந்தனைத்தெளிவு பிறக்கின்ற பருவத்தில் நிச்சயமாக, வாழ்க்கைபற்றி சில முடிவான விடயங்கள் அவர்கள் மனதில் தோன்றி விடுகின்றன. அவ்விடயங்கள் ஒருநல்ல கனவாகவோஅல்லது உயர்ந்த இலட்சியமாகவோ அமையுமாயின் அந்த வெற்றியின் பெரும் பங்கு, அவனை வளர்த்த கல்விச்சமூகத்தையே சாரும்.

**அவ்வாறான அவரது கனவு,**
**அமைதி குலையாத**
**ஆரோக்கியம் குன்றாத**
**இனிமை நிறைந்த**
**உயர் ஒழுக்க விழுமியங்கள்**
**மிளிரும் வாழ்க்கை,**

என்பதாக அமைய திசை வெளியீட்டினூடாக திசையுடன் இணைந்துள்ள கல்விச்சமூகமும் பங்களிப்பதே, திசை வெளியீட்டுக் குழுவின் **பிரதான நோக்கமாகும்.**

## நோக்கத்தை அடைவதற்கான செயற்கூறுகள்

1. நாம் வாழும் சமூகத்தின் அமைதியைக் குலைக்கின்ற பிரச்சனைகளை வெல்வதற்கு, வளர்ந்து வரும் சமுதாயம் ஆழமான தெளிந்த அறிவைப் பெறவேண்டும். அதற்கேற்ப அறிவுப்பரம்பலைச் செய்யக்கூடய இதழாக திசை பரிணமித்தல்.

2. குடும்பங்கள் ஆரோக்கியம் குன்றாத வாழ்வை அடைய வேண்டுமாயின், நோய்க்கான முக்கிய காரணிகளில் ஒன்றான சூழல் மாசடைதலைத் தவிர்ப்பதற்கான மாற்று வழிகளை அறிவது அவசியம். இதற்காக இயற்கையோடு இணைந்த வாழ்க்கைமுறையைத் தமது பண்பாடாக ஒழுங்கமைத்துக் கொள்ளும் தகமையும் எதிர்காலச் சந்ததிக்கு வேண்டியதாகும். எனவே இதற்கான புதிய கருத்துான்றல்களைத் திசை என்ற சாதனம் இயலுமானவரை செய்யும்.

3. இனிமை நிறைகின்ற வாழ்வை அமைத்துக்கொள்ள வேண்டுமாயின் குடும்பத்துக்குப் போதுமானளவு வருமானத்தை ஈட்டக்கூடிய தொழிலை அடைவது அவசியம். இச்சமயம் தேசத்தின் வளங்கள் விரையமாவதைத் தடுப்பதும், சமூகத்தின் அத்தியாவசியத் தேவைகளை நிறைவு செய்யக்கூடிய உற்பத்திகளைப் பெருக்குவதுமான தொழில் வளங்கள் இனங்காணப்படல் வேண்டும். இதற்கேற்பவே தொழில்நுட்பங்களையும் தேர்வு செய்ய வேண்டியிருக்கும். இத்தகைய தேடல்களுக்குத் திசை உறுதியுடன் வழி சமைக்கும்.

4. உயர் ஒழுக்க விழுமியங்களுடன் வாழ்தல் என்ற இலட்சியம் வெல்லப்பட வேண்டுமாயின், எளிமையான வாழ்க்கைமுறை அவசியம். அத்தியாவசியத் தேவைகளைப் புறக்கணித்து, பகட்டு, படாடோபமான செலவுகளுக்கு முக்கியத்துவம் அளிப்போமாயின் "கையறு நிலையில்" அத்தியாவசியத் தேவைகளைப் பெறுவதற்காகப் பொய்கூறல்,களவுசெய்தல்,ஏனைய மாபாதகங்களையும் செய்யவேண்டி நேரலாம். எளிமையும், திட்டமிடலும் எம்மை **உண்மையாய் இருத்தல், நேர்மையாய் இருத்தல்** ஆகிய முதன்மையான ஒழுக்க விழுமியங்களில் உறுதியோடு இருக்கச் செய்கிறது. திசையின் இலக்கியப்பக்கங்கள் இதனை வளர்க்கும்.

மேற்கூறிய நான்கு செயற்கூறுகளும்
திசையைச் செவ்வனே வழிநடத்தும்.

# நெஞ்சை அள்ளும் சிலம்பு

"செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம்" என்றார் பொய்யா மொழிப்புலவர், ஆயினும் காலவெள்ளத்தில் கரைந்து போகாமல்,நின்று நிலைத்து நிற்பது சிலப்பதிகாரம் எனும் சிலம்புச்செல்வம்.

எந்த நூற்றாண்டாயினும், எத்தனை ஆண்டுகள் கழிந்தாலும் என்றும் அழியாப்புகழோடு தமிழுக்கு ஓர் இலக்கிய மணியாக, சிறந்த சொல்லோவியமாக, தமிழர்தம் செல்வமாக மிளிர்வது சிலப்பதிகாரம் என்னும் சிலம்புச்செல்வம். முத்தமிழால் இயன்று மூவேந்தர் தம் சிறப்புக்களை இயம்பி, மனித வாழ்வின் உண்மை நிலைக்கு உயர்வு தந்த காப்பியம் சிலப்பதிகாரம். இதனால்தான் மா.பொ. சிவஞானம் அவர்களும் "நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம்" என்று சிலப்பதிகாரத்தைப் புகழ்ந்து உரைத்தார்.

காவிரியாறு கடலோடு கலக்குமிடம் பூம்புகார். அங்கே இருமனம் ஒத்துத் திருமணம் புரிந்து வாழ்ந்தவர்கள் தாம் கோவலனும் கண்ணகியும். கண்ணகி வாழ்வில் தனிமையும் கோவலன் வாழ்வில் இனிமையும் இருந்தபோதும், ஊழ்வினை விடவில்லை வந்து உறுத்தியது. கோவலன் காவிரியைப் பாடினான்.மாதவி கானல்வரி பாடினாள். இருவரும் ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ளாமல் பிரிந்து விட்டனர்.

பொருள் தேடக் கோவலன் மதுரையை நோக்கிப் புறப்படுகிறான். அங்கே, கோவலன் செய்யாத குற்றத்திற்காக நீதி தேரா மன்னன் பாண்டியனால் சிலம்பு திருடிய கள்வன் என்ற பெயரால், கொலை செய்யப்படுகிறான்.

இளங்கோவடிகள் என்ன செய்வார் பாவம். கொலைக்களக் காதையை அரங்கேற்றி விட்டார். கண்ணகி தங்கியிருந்த ஆயர் சேரியில் தீ நிமித்தம் நிகழ்கிறது. இங்குதான்,

இளங்கோவடிகள் தன் கவித்திறத்தால் கண்ணகியை வீரக்கண்ணகி ஆக்கிப்பார்க்கிறார். கற்புடைச் செல்வியாக உலகுக்கு எடுத்துக்காட்டுகிறார். காட்டியும் விட்டார்.

கண்ணீர் எனும் துன்பமாலையைக் கண்ணகியின் கழுத்தில் அணிந்து விட்டார். கண்ணகியோ சினம் கொண்ட புலி போன்று கனன்று எரியும் கோபக்கண்களோடு, பாண்டியன் முன்னிலைநின்று ''தேரா மன்னா நீதி தவறி விட்டாய் என் கணவன் கள்வன் அல்லன். நீயே கள்வன்'' என்று நீதி கேட்டு நிற்ப பாண்டியனும்,'' மன்பதை காக்கும் தென்புலம் காவல் என்முதல் பிழைத்தது கெடுக என் ஆயுள்.'' என்றுரைத்து வளைந்த செங்கோலைத் தன்னுயிர் கொடுத்து நிமிர்த்தினான்.


கண்ணகியின் கதை, சோகம் நிறைந்த வரலாற்றுக் காப்பியம்.சோழநாட்டில் தொடங்கிய கண்ணகியின் கண்ணீர்க்கதை, பாண்டி நாட்டில் வீரத்தின் விளை நிலமாய் விளங்கி பொற்பாய்த் துலங்கி, நீதியை நிலை நாட்டி,உரவோர் உள்ளத்தில் உறைந்து, இறுதியில் காவேரிக்கரையில் சேரன் செங்குட்டுவனால் உலகம் உவப்ப சிலையாக நிமிர்ந்து நிற்கிறது.

''அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும்'' என்பதும்,'' உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்தலும்'' என்பதும், ''ஊள்வினை உருத்து வந்து ஊட்டும்'' என்பதும் ஆகிய வாழ்க்கைக்கு வேண்டிய உண்மை மணிகள் மூன்றையும் சிலம்புச் செல்வம் என்னும் அட்சய பாத்திரத்தில் இருந்து எடுத்து அறத்தின் மேன்மையையும், நீதியின் திறத்தையும், கற்பின் பொற்பையும் எடுத்துக்காடடிய இளங்கோவடிகளின் ஆழ்ந்த கூர்மையான தமிழறிவு போற்றுதற்குரியது. சிலம்புச் செல்வர் மா.பொ.சிவஞானம் போற்றிய சிலம்பு, நெங்சை அள்ளும் சிலம்பு. நெஞ்சை நெகிழ வைக்கும் சிலம்பு. சிந்தனையைக் கிளறி, விரிவடையச்செய்து ,தமிழ் நெஞ்சமெலாம் நிறைந்து விருந்தளித்து விடியலுக்காய் நிற்கின்றது.கால வெள்ளத்தில் கரைந்து போகாமல் வானத்துமுழுநிலவாய் ஒளிபரப்பி நிற்கிறது.

*-கதிர்*

# விண்வெளி ஆய்வறிவியல்

*அண்மையில் சூரியனில் நிகழ்ந்த வெடிப்புச் சம்பவத்தை நாசாவின் சூரிய சக்திவாய்ந்த வர்னிலை ஆராய்ச்சி நிலையம் படம் பிடித்துக் காண்பித்துள்ளது.*



*ஒரு மிகப்பெரிய மிதமிஞ்சிய ஊதா வாயுப்படலம் சூரியனுக்கு மேலாக.*

கடந்த மே 18 இல் சூரியனின் மேற்பரப்பில் இருளையும் மிக நீண்டு வியாபித்துச் செல்லும் மெல்லியதான நூலிழை போன்ற புகைப்படலத்தையும் அதன் அடியில்பிரகாசமான பகுதிகளையும் நாசாவின் ஆய்வு நிலையம் காட்டியுள்ளது.

கடந்த ஏப்ரல் மாதத்திலிருந்து மே நடுப்பகுதி வரையிலும் சூரியனில் இத்தகய மாற்றங்கள்

நிகழ்ந்துள்ளதை நாசா அவதானிப்பு நிலையத்தகவல்கள். அறிவிக்கின்றன. *படத்திலுள்ள பிரகாசமான பகுதிகள், சூரியனில் இருந்து புதிதாகப்பிறந்த நட்நத்திரங்கள்* என நாசாவின் வானிலை ஆய்வு நிலையம் கூறுகிறது. இவ்விடயங்களுக்கு ஆதாரமாக கொழுந்து விட்டெரியும் சூரியனின் படத்தையும் தகவல்களையும் கடந்த ஏப்ரலில் அது வெளியிட்டிருந்தது.

## *சூரியனின் பண்புகள் பற்றிய செய்திகளை மேலும் அறிந்து கொள்வோம்.*

### *சூரிய நிறமாலை*

சூரியனை ஆய்வு செய்பவர்கள் அதனை இரண்டு பகுதிகளாகப் பகுத்துப்பார்க்கிறார்கள்.

1-நிறமண்டலம் (chromosphere)
2-ஒளிமண்டலம் (photosphere)

நிறமண்டலப்பகுதியே நிறமாலைக்குரியதாகும். இது ஒளி மண்டலத்திலும்பார்க்க வெப்பநிலை குறைவானதாகும். இது ஒளி மண்டலத்துக்கு வெளியே காணப்படுகிறது. ஒளிமண்டலம் சூரியனின் உட்பகுதியாகும். இதுவெப்பநிலை அதிகமான பகுதியாகும்.

நிறமாலையின் மேற்பரப்பு வெப்பநிலை 5750k அலை நீளம் 5000A நிறமாலையில் (Fraunhofer lines) ∴பிரனோ∴பர் வரிகள் (கருங்கோடுகள்),ஒளிர் வரிகள் காணப்படுகின்றன. சூரியனின் வாயு மண்டலம் ∴ிரனோ∴பர் வரிகளைக்கொண்டது.இவ்வாயு மண்டலத்தில் அறுபதுக்கும் மேற்பட்ட வாயுக்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

*ஃபிரனோபஃர் வரிகள் அகர வரிசையில்குறிக்கப்பட்டு சில தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.*

| வரி | தனிமம் | அலைநீளம் $A^{0}$ |
|---|---|---|
| A | ஒக்சிஜின் | 7494 |
| B | ஒக்சிஜின் | 6967 |
| C | ஐதரசன் | 6563 |
| $D_1$ | சோடியம் | 5896 |
| $D_2$ | சோடியம் | 5890 |
| F | ஐதரசன் | 4861 |
| $G_1$ | ஐதரசன் | 4341 |
| H | கல்சியம் | 3969 |
| K | கல்சியம் | 3934 |

சூரிய நிறமாலையிலிருந்து சூரியனின் நிறையில் 74.8% ஐதரசன், 24% ஈலியம், நேயன் 1% கார்பன்,நைதரசன்,ஒக்சிஜின் 0.2% கனமான தனிமங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

ஈர்ப்பு விசை தவிர,சூரியன் $1.4 \times 10^{6}$ எர்க்/செ.மி/நொடி ஆற்றல் அடர்த்தியுடன் புவியை நோக்கிக் கதிர்வீச்சைத் தருகிறது. இதில் பெரும்பாலான ஆற்றல் 0.4-0.7 மைக்கிரோ மீட்டர் வரை அலைநீளப் பார்வைப்புலத்தில் இருக்கும். மேலும் சூரிய மண்டலக் காற்றில் நொடிக்கு 400-500 கி.மீ வேகத்தில் புரோட்டன்களைக் கொண்டதுகள்களை வெளியிட்டு, நொடிக்கு $10^{13}$ கிராம் வீதத்தில் விரிவடையும். இது புவிக்கருகில் 5 துகள்கள் எனும் வீதத்தில் இருக்கும்.

# சூரியன்

*சூரியன்தன்னைத்தானே தன்மையத்தியங்கு அச்சுக்கொண்டு 25.38 நாட்கள் காலவட்டத்தில் ஒரு முறை சுற்றுகிறது.*

சூரியக்குடும்பத்தில் மையமாக விளங்குவது சூரியன். தன்னொளிர் தன்மையுடன், ஒரு பந்து போன்ற வடிவமுடையது.அதன் விட்டம் ஏறக்குறைய 1,392,000 கி.மீ அகும். புவியைவிட ஏறத்தாழ 13,00,000 மடங்கு உருவத்தில் பெரியதாகவும், 3,33,000 மடங்கு எடை கொண்டதாகவும் உள்ளது. புவியிலிருந்து ஏறத்தாழ 14,96,00,000 கி.மீ தொலைவி லுள்ளது. நொடிக்கு 2,99,792 கி.மீ. செலலும் ஒளி சூரியனிலி ருந்து புவியை அடைய 8.5 நிமிடங்கள் எடுக்கின்றன. சூரியன் தன்னைத்தானே தன் மையத்தியங்கு அச்சுக்கொண்டு 25.38 நாட்கள் காலவட்டத்தில் ஒரு முறை சுற்றுகிறது. இக்கால வட்டம் மாறுதலுக்குட்பட்டது. $30^0$ அகலாங்கில் இக்காலவட்டம் 28 நாட்களாகவும், துருவப்பகுதியில் ஏறக்குறைய 36 நாட்களாகவும் மாறுகிறது.

*சூரியன், வெப்பத்தை வெளிவிடுவதன் காரணமாக அனைத்து வெப்பத்தையும் காலப்போக்கில் இழந்து குளிர்மண்டலமாக மாறாது, ஏனெனில் இதிலிருந்து வெப்பம் குறையும்போது அதனுள்ளே இருக்கும் ஐதரசன் வெப்பமாகமாறி, இழக்கும் ஆற்றலை ஈடுசெய்கிறது.*

360 கி.மீ தடிப்புள்ள போர்வையைப் போன்ற வெப்ப ஆவியைக்கொண்ட சூரியனின் புறவெப்பநிலை $5500^0$C உள்ளே செல்லச்செல்ல வெப்பநிலை மிகவேகமாக உயர்கிறது எனவும் கணக்கிடப்பட்டுள்ளது. சூரியனின் மையப்பகுதியின்வெப்பம்15,000,000-16,000,000$^0$C வரை மாறுபடுவதாகத் தெரிகிறது எனக் கணிப்பிடப்பட்டுள்ளது.

75% ஐதரசனையும் 24% ஈலியத்தையும் 1% ஏனையபொருட் களையும் உள்ளடக்கிய சூரியன், வெப்பத்தை வெளிவிடுவதன் காரணமாக அனைத்து வெப்பத்தையும் காலப்போக்கில் இழந்து குளிர் மண்டலமாக மாறாது, ஏனெனில் இதிலிருந்து வெப்பம் குறையும்போது, அதனுள்ளே இருக்கும் ஐதரசன் வெப்பமாக மாறி, இழக்கும் ஆற்றலை அவ்வப்போது ஈடுகட்டிக் கொள்கிறது.

*சூரியனை ஒரு கறுப்புக்கண்ணாடி மூலம் பார்த்தால் பெரிய பெரிய பள்ளங்களும் , எரிமலைகளும் இருப்பது போலத் தோற்றமளிக்கும்.*

சூரியனை ஒரு கறுப்புக் கண்ணாடி மூலம் பார்த்தால், பெரிய பெரிய பள்ளங்களும், எரிமலைகளும் இருப்பது போலத் தோற்றமளிக்கும். இவை சூரியப் புள்ளிகள் அல்லது கறைகள் (Sun spots) எனப்படும். சூரியனுக்கு உள்ளிருந்து வெளிவரும் வாயுக்கள், விரிவடைவதால் வெப்பம் தணிந்து ஒரு புள்ளி போன்ற அமைப்பு ஏற்படுகிறது. இப்புள்ளிகள் வெவ்வேறு விட்டங்கள் கொண்டவை. சில புள்ளிகள் பல கோள்களை விழுங்கி விடுமளவுக்குப் பெரியவை. சில புள்ளிகள் 15 நாட்களுக்கு ஒரு முறையும் வேறுசில 6 மாதங்களுக்கு ஒருமுறையும் தோன்றி மறைகின்றன.

சூரிய ஒளியும் வெப்பமும் இல்லையெனில் உயிரினங்கள் இப்புவியில் வாழ இயலாது வீழ்ந்துவிடும். ஆயினும் அதிக வெப்பம் உடலுக்குக் கேடு விளைவிக்கும் . வெற்றுக்கண்ணால் சூரியனைக் காணலும் கண்ணுக்குக் கேடு விளைவிக்கும்.

தகவ: இணையம், அறிவுக்களஞ்சியம்

# மாணவர் ஆக்கிய பக்கங்கள்

## சுனாமி

ஆழிவாயின் ஓரம்
அழகாக வாழந்தநேரம்
காலனாய்க் கடலும்பொங்கி
காவுகள் குவித்த கோரம்
காலாதிகாலம் வாழ்ந்தோர்
கண்களில் எல்லாம் ஈரம்

என்னம்மா பாதகம்
செய்தோம்
இடியினை வீழ்த்திச்
சென்றாய்
நிம்மதி யாவும் போச்சு
நிற்கதியானோம், ஐயோ!
ஓய்வில்லா வாழ்வில்
யார்க்கும்
ஓய்வெனில் மரணம்,
ஐயோ!

தெ.நிரோசன் தரம் 10
சிதம்பராக்கல்லூரி

## HEAVEN OF HELL

*Tears Fears full of life
Teared pieces of clothe
Turned all faces towards me
All from is bitter expression*

*One just shakes the hands
It's a routine to share smiles
He brings fortune in my life
Honour for me as a friend of
library*

*Achange of phase in the road
A rich flatted in the mud, only
the Heaven of hell rains
mercy
towards Hell of Heaven.*

**Sobana Ravichandran,**
**Gr:12 Sc,**
**Uduppiddy Girl's College**

# மலருமா மனித நேயம்?

அன்னையவள் வயிற்றிலே
அற்புதக் கருவானது
துளிர்விட்டு பின்
ஈரைந்து மாதங்கள் சுமந்து
ஈன்றெடுக்கின்றாள் தாய்

குழந்தை வளர்ந்து
குடும்பம் எனும்விருட்சமாகி
உலகுதனைச் சுற்றும்
உன்னத காலமாம்
ஒருகாலம்

மானுடர் உலகில்
நசுக்கப்படும்
அஃறிணையாய் வாழும்
நரக காலம் இன்று

சிங்கக்குட்டிகள் போல்
சீறித்திரிந்தவர்களே இன்று
குண்டுகள் உடலைப்பிளக்க
குபீரென்று உதிரம் கொட்ட
மண்ணுடன்
மாண்டு போகின்றனர்

புத்துயிர்களைத் தாங்கும்
பூமித்தாயோ
புழுவாகிக்கொண்டிருக்கும்
பிணங்கள் பல்லாயிரம்
தாங்குகிறாள் இன்று

நீர், மழையாகப்
பொழிந்தால்தான்
மண்வளமாகுமா?
இல்லை இல்லை
இரத்த மழையால் வளமாகிக்
கொண்டிருக்கிறது இன்றய
நிலங்கள்

நெல்விதைக்கும்
பூமிதனிலே
நெடுநாள் வரை
பிணமாக்கி மனித இனத்தைப்
புதைக்கின்றனர்
பசளைகளாக!

நிலை குலைந்தது
மனித வாழ்வு!
நிற்கதியாய் நிற்கின்றனர்
எம்மக்கள்!
மனித நேயத்தைப் புறந்தள்ளி
மக்களைப் பந்தாடுகின்றனர்
மண்ணிலே


குண்டுமழை பொழிந்த
பூமிதனிலே
பூமழை பொழிய
மலருமா மனிதநேயம்?

*அகதேசி தரம் 12 - உடுப்பிட்டி மகளிர் கல்லூரி*


## சிறுவர்களின் கைவண்ணத்தைப் பாராட்டுவோம்

*செல்வி நிலானி. கனகரட்ணம்*

*ஆண்டு-1* *உடுப்பிட்டி,மகளிர் கல்லூரி*



*செல்வி அகல்விழி. அசோகலிங்கம்* *ஆண்டு-1*
*உடுப்பிட்டி மகளிர் கல்லூரி*



# உயிர் மூச்சு

சிறுகதை

துளசிதா. சிவராஜா
தரம்: 13 விஞ்
உடுப்பிட்டி பெண்கள் கல்லூரி

பாடசாலை மணி "கணீர கணீர" என ஒலித்துக்கொண்டிருந்தது. பாடசாலை மாணவர் எல்லோரும் நிரை நிரையாக வகுப்புகளுக்குச் சென்றுகொண்டிருந்தனர். பாடசாலைக் கட்டடங்கள் தலை நிமிர்ந்து நின்றன. ஒரு கட்டடத்தின் வாசலில் சப்பாத்துக்கள் ஒழுங்காக அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. சில செருப்புக்களும் இருந்தன. அதுதான் பாடசாலை நூலகம். எத்தனையோ மாணவர்கள் பாடசாலை யில் படிக்கின்றார்கள். ஆனால் நூலகத்தில் ஒருசில மாணவர்களே இருக்கின்றார்கள். நூலக அதிகாரி சுப்பையா "ஏய் தம்பி! என்ன புத்தகம் தேடுகிறாய்" என்று கேட்டார். அப்போது ஒரு முகம் சுப்பையாவின் பால் திரும்பியது. முகத்தில் கவலையும் வறுமையும் நிரம்பியிருந்தது. அணிந்திருந்த ஆடை பழுப்பேறியிருந்தது. ஆனால் கண்களிலும் மனத்திலுமோ கற்க வேண்டும் என்ற ஆசை. இவை யாவும் அவனில் தென்பட்டது. அவன் வேறு யாருமல்ல குமார். அந்தப் பாடசாலையில் உயர்தரத்தில் விஞ்ஞானப்பிரிவில் கல்விகற்கும் ஒரு மாணவன்.

"ஏன் சார் கூப்பிட்டீங்களா? பாஸ் பேப்பர் தேடிக்கொண்டிருக்கிறன்." என்று கூறினான். உடனே "அது அந்த மூன்றாவது தட்டில் இருக்கிறது." என்று கூறினார் சுப்பையா. மிக்க நன்றி என்று கூறிவிட்டு ஒரு ஆசனத்தில்

அமர்ந்து கணக்குகளை எழுதிச் செய்கின்றான். உயர்தரத்தில் கல்வி கற்பது என்றால், தனியார் கல்வி நிறுவனங்களுக்குச் செல்ல வேண்டியது. ஒரு கட்டாயமாகக் கருதப்படுகிறது. ஆனால் குமார் தனது வீட்டுநிலையை மனதிற் கொண்டு தனியார் கல்வி நிலையத்திற்குச் செல்வதில்லை. அதனால் அவனுக்குப் பாடங்கள் மிகவும் கடினமாகத்தான் இருந்தன. என்றாலும் மனதில் ஒரு தைரியம் நூலகத்தையே உயிராகக் கொண்டு, தனது பாடசாலை ஆசிரியரைச் சுவாசக் காற்றாகக்கொணடு விடா முயற்சியுடன் தன்னால் இயன்றளவு படித்தான்.

சிலவேளைகளில் அவனுக்குக் கணக்குகள் மிகமிகக் கடினமாய் இருக்கும். என்ன செய்வது என்று தெரியாயது திகைப்பான். இப்படித்தான் ஒருநாள், தனது கணித ஆசிரியரிடம் மிகவும்கடினமான ஒரு கணக்கை விளங்கப் படுத்தும் படி கேட்டான். "சேர் இந்தக்கணக்கை எனக்கு விளங்கப்படுத்தி விடுங்க" என்று கேட்டான். "இஞ்ச வா தம்பி! இந்தக்கணக்கை எங்கை அப்பு பார்த்துச்செய்தாய்" என்று கேட்டார். "எங்கட நூலகத்தில் ஒரு இங்கிலிஸ் புத்தகத்தில் இருந்து பார்த்துச் செய்தனான்" என்று கூறினான் குமார். "நல்லாப்படியப்பு இப்படியான கேள்விகள்தான் இறுதிப் பரீட்சைக்கு வரும். இந்தக்கேள்வி போனவருடம் பரீட்சைக்கு வந்தது" எனக்கூறினார். ஆசிரியர் அவ்வாறு கூறிவிட்டு அக்கணக்கை விளங்கப்படுத்திவிட்டார். அவனுக்கு மிகவும் சந்தோசமாக இருந்தது.

தனியார் கல்வி நிறுவனங்களுக்குச் செல்லாத தால் ஏனைய மாணவர்களிடத்தில் கேட்டறிந்தும் தனது சந்தேகங்களைத் தீர்த்துக்கொள்வான். குமாருக்குப் பாடப் புத்தகங்கள் படிப்பது மட்டுமன்றி இலக்கியக் கதைகள், விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்கள், பத்திரிகைகள் இவற்றை யெல்லாம் வாசிப்பதில் மிகுந்த ஆர்வம் இருந்தது.

இதனால் அவனிடம் சகலவிதமான அறிவும் நிரம்பியிருந்தது. தனக்குள் இருக்கும் திறமையை வெளிக்காட்ட அவனுக்குக் கூச்சம். ஏனெனில் தனது உடையைப்பார்த்து ஏனையவர் பழிப்பார்கள் என்று நினைத்துப் பின் ஒதுங்கி நிற்பான்.

ஆசிரியரோ மாணவரோ புத்தகம் ஏதும் தேடிக் கொண்டிருந்தால். அதனை உடனே எடுத்துக் கொடுக்கும் திறமை அவனிடம் இருந்தது. இவ்வாறாக எல்லா ஆசிரியர் மனத்திலும் குமாருக்கு ஒரு தனியிடம் இருந்தது. அது மட்டுமன்றி, அவன்மீது எல்லோருக்கும் ஒரு நம்பிக்கை இருந்தது. எல்லா அசிரியரும் "குமார் நல்லாப் படிக்கிறான் இந்தமுறை அவன் பல்கலைக்கழகம் செல்வான்" என்று கதைக்கும் அளவுக்கு அவன எல்லோரையும் ஈர்த்து வைத்திருந்தான். இது மட்டுமன்றி சிலர் " இந்தக்காலத்தில் ரியூசனுக்குப் போய் பாஸ் பண்ணுதுகள் இல்லை. இவன் என்னெண்டு பாஸ் பண்ணப்போறான்" என்று இழக்காரமாகவும் கதைத்தனர்.

நூலகத்தின் மீது உயிராக இருந்த இவனுக்கு நூலகப்புத்தகங்கள் பெரும்பாலும் அத்துப்படியாக இருந்தன. கடந்த கால வினாக்கள் எல்லாம் பலமுறை மீண்டும் மீண்டும் செய்து பாடமாகும் அளவுக்கு ஞாபகத்தில் பதிந்திருந்தன. இவனின் மீது சுப்பையாவுக்கு நல்ல நம்பிக்கை இருந்தது. இதனால் அவனுக்கு எந்தப் புத்தகம் கேட்டாலும் மிகவும் ஆவலுடன் எடுத்துக் கொடுப்பார். இவ்வாறாக அவன் நூலகத்தில் உள்ள புத்தகங்களைப் படித்து வருவான். இந்தக் காலத்தில் வாசிப்பு தினப் போட்டிகள் பல நடைபெற்றன. குமார் பெரிதாகப் போட்டிகளில் பங்குபற்றுவதில்லை. என்றாலும் அவனுக்கு ஒரு ஆச்சரியம் காத்திருந்தது.

சென்ற வருடத்தில் நூலகத்தைக் கூடிய நாட்கள் பயன்படுத்திய மாணவன் எனற பரிசை வழங்க மேடைக்கு ஆசிரியர் அழைக்கிறார். அது யார் பெயர் வாசிக்கப்படுகிறது "குமார் பொன்னையா விஞ்ஞானப்பிரிவு 2009 அவர்களை

மேடைக்கு அழைக்கின்றோம்''. குமாரின் கால்கள் நடுங்கு கின்றன. மேடைக்கு ஏற கால்கள் தடுக்கின்றன. பழுப்பேறிய உடை அவனைத் தலை குனிய வைக்கின்றது. என்ன செய்வது என்று யோசித்துவிட்டு மனதைக்கட்டுப்படுத்திக்கொண்டு மேடையில் ஏறிப்பரிசைப் பெறுகிறான். இவ்வாறு தனது கவலையை அடக்கிவிட்டு சாந்தப்படுவது போல் காட்டிக் கொள்ளுகின்றான்.



பரீட்சைக் காலமும் நெருங்கியது. சகல மாணவர்களும் பரீட்சை விடுமுறைக்காக வீடுகளில் நின்று விட்டனர். ஆனால் குமார் தனக்கு நூலகத்தில் படிப்பது போன்று அமைதி வராது. நூலகத்தில் தனக்குத் தேவையான சகல புத்தகங்களும் இருக்கின்றன என்ற காரணத்தால் தினமும் பாடசாலைக்கு வருவான்.கடைசிக் காலங்களில் அனைத்து ஆசிரியர்களின் ஆசியுடனும் இறை சிந்தனையுடனும் தனது கல்வியை நிறைவு செய்ய வேண்டும் என்ற எண்ணம் உள்ளத்தில் உருவாகியதால் இறுதிநாள் எல்லா ஆசிரியரிடமும் ஆசி பெற்று மன அமைதியுடன் சென்றான்.

பரீட்சை நாளும் வந்தது. வினாத்தாள்களைப் பார்த்ததும் அவனுக்கு முகத்தில் ஒரு மலர்ச்சி, மிகவும் வேகமாகவும் தெளிவாகவும் அவன் பரீட்சை எழுதி முடித்தான். மனதிலே தனது நூலகத்துக்கே நன்றி கூறினான். அவனுக்கப் பரீட்சை வினாக்கள் எல்லாம்மிகவும் பழக்கப்பட்டனவாகவே இருந்தன. பரீட்சை மண்டபத்தை விட்டு வெளியேறும் பொழுது. எல்லா மாணவர்களும் அவனை நக்கலாகப் பார்த்தனர். அவன் எதையும் பொருட்படுத்தவில்லை சென்றுவிட்டான்.

பரீட்சை முடிவுக்காகக் காத்திருக்கும் காலங் களில் நூலகத்திற்குச் சென்று பல அறிவு சார்ந்த, படிப்பினை யான கதைகளையும் வாசித்தான். தனது ஊரில் இருக்கும் சிறிய மாணவர்களுக்குப் பாடம் சொல்லிக் கொடுத்தான். பரீட்சை முடிவு வெளியாகும் காலம் நெருங்கியது. தனக்கு நல்ல பெறுபேறு வரும் என்ற நம்பிக்கை மனதில் இருந்தாலும் பதற்றமும் இருந்தது.

குமார் மாவட்ட நிலையில் முதலிடத்தைப் பெற்றான். இதனால் அவனது பாடசாலை மிகப் பெருமை அடைந்தது. பத்திரிகைக்கார்கள் அவனைப் பேட்டி எடுப்பதற் காகத் தேடி வந்தார்கள். "நான் வெற்றியடைந்ததற்கு உயிர் மூச்சாக இருந்தது எனது பாடசாலை நூல்நிலையம் தான்.அது எங்கள் விலைமதிப்பற்ற சொத்து." என்று தனது பேட்டியின் போது மிகவும் பூரிப்போடு கூறினான். இப்போது அவன் தனது உயர் படிப்பைப் பற்றிய சிந்தனையில்..............

## பொதுஅறிவு,நுண்ணறிவுப் போட்டி இல:1

*இங்கே வெட்டுக எனக்காட்டிய பகுதியூடக வெட்டிய இப் பக்கத்தின் துண்டுடன் விடையை எழுதி, 31.08.10 இற்கு முன் அனுப்புங்கள். வினாக்கள் யாவற்றுக்கும் சரியான விடை எழுதிய, அதிஷ்ட சாலியாகத் தேர்ந்தெடுக்கப்படும் மாணவனுக்கு ரூபா 500/- பரிசுத்தொகை வழங்கப்படும்.*

1. இலங்கைப்படத்தை முதலில் வரைந்தவர் யார்? எந்த நூற்றாண்டில் வரைந்தார்?
2. அந்நியர் வருகைக்கு முன் இலங்கை எத்தனை பிரிவு இராட்சியங்களைக் கொண்டதாக இருந்தது? அவை எவை?
3. சிங்கள மொழி எம்மொழிகளின் கலப்பைக் கொண்டு ஆக்கப்பட்டுள்ளது?
4. டைனமோவைக் கண்டு பிடித்தவர் யார்? இவர் எந்த நாட்டைச் சேர்ந்தவர்?
5. நீர்மூழ்கிக் கப்பலைக் கண்டு பிடித்தவர் யார்? இவர் எந்த நாட்டைச் சேர்ந்தவர்?
6. நீலமாளிகை என்று அழைக்கப்படுவது எந்த நாட்டு அதிபரின் மாளிகை?
7. A Space Odyssey (எ ஸ்பேஸ் ஒடிசி) என்ற நூலை எழுதியவர் யார்?
8. வானவூர்தி செலுத்துபவனை தமழில் எப்படிஅழைப்பது?
9. தபோவனம் என்ற தமிழச்சொல்லின் கருத்து யாது?
10. இலங்கை இந்திய சமாதான உடன்படிக்கை எப்போது யார் யாரால், ஏன் எழுதப்பட்டது?
11. உலக சிறுவர்தினம், உலக முதியோர் தினம் கொண்டாடப் படும் திகதி எது?
12. மிகக்குறைந்த உருகுநிலை கொண்ட உலோகம் எது?
13. இனி நடக்க இருக்கும் ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகள் எத்தனையாம் ஆண்டு, எங்கே நடைபெற உள்ளது?

14. தங்கமும் வைரமும் கனியங்களாக அதிக அளவில் கிடைக்கக்கூடிய நாடு எது?

15. மனித சமுதாயத்தின் பொருளாதாரப் பிரச்சனைகளை ஆழமாக விளக்கி **மூலதனம்** என்ற நூலை முதலில் எழுதியவர் யார்?

16. செம்பூத விண்மீன்களின் உள்ளீடுகளாகக் காணப்படும் மூலகங்கள் எவை?

17. 1839ம் ஆண்டு செவ்வாய்க் கிழமையில் முடிவடைந்தது எனின் 1840ம் ஆண்டு முடிவடையும் நாள் எது?

18. உனது தம்பி உன்னை விட இரண்டு வருடங்கள் இளையவன். உனது அக்காவைவிட ஐந்து வருடங்கள் இளையவன். நீர் 2001ல் பிறந்தவள் ஆயின் உமது சகோதரியும், சகோதரனும் பிறந்த ஆண்டுகள் எவை?

19. காந்தனிடம் ஒரு தொகைப் பணம் உள்ளது. அப்பணத்தின் 1/3 பங்கை மோகனுக்கு வழங்குகிறான். மோகன் தன்னிடமிருப்பதன் 1/4 பங்கை இரவிக்கு வழங்குகிறான். இரவியிற்கு கிடைத்திருக்கும் பணம் மூன்று இரண்டு, ரூபா நாணயங்களும் ஒரு, ஒரு ரூபா நாணயமும் ஒரு, ஐம்பது சத நாணயமும் ஆகும் எனின் காந்தனிடம் இருந்த பணம் எவ்வளவு?

20. ஒரு சதுர வடிவான விளையாட்டு மைதானம். அதன் சுற்றளவு 600மீ. மைதானத்தைச் சுற்றி 25மீ இடை வெளிகளில் மின் விளக்குத் தூண்கள் நடப்பட்டுள்ளன. நடப்பட்டுள்ள தூண்களின் எண்ணிக்கை யாது?

இங்கே வெட்டவும்

---

| | |
|---|---|
| முழுப்பெயர்: ........................................ | |
| தரம்: .......................... | திகதி: .......................... |
| பாடசாலை: ........................................ | |

## ஆரம்பக்கல்வி
## மாணவர்களுக்காகவிரியும் பக்கங்கள்

| |
|---|
| அ) பாழடைந்த வீட்டின் சுயசரிதை |
| ஆ) புதிய விடுகதைகள் |
| இ) சிறுகதை-மரங்கொத்தியின் ஆய்வு |
| ஈ) சிறுவர் பாடல் |
| உ) கட்டுரை |

சுயசரிதை

### இராஜ் பவன்



1.நான் யாழ் மாவட்டத்தில் கோண்டாவில் எனும் இடத்தில் பலாலி வீதிக்கு அருகாமையில் அமைந்திருக்கிறேன்.

2.இப்போது என்னை யாரும் எனது பெயரைச் சொல்லிக் கதைப்பதில்லை, முன்பு எனக்கு இருந்த பெயர் என்ன தெரியுமா ***இராஜ்பவன்*** எவ்வளவு அழகான பெயர்.

3. கதிரவேற்பிள்ளை கனகவேல் என்பவர் தனது குடும்பத்துக்காக என்னை 1980இல் ஸ்தாபித்தார்.

4. அவரும் அவரது மகன்மார்களும் புகையிலைத் தோட்டம்

செய்து பெற்ற வருமானத்தில் என்னை ஆசை ஆசையாகக் பெரிய வீடாக நிர்மாணித்தார்கள்.

5. நான் கீழ்த்தளத்தில் பத்து அறைகள் மேற்றளத்தில் பத்து அறைகள் கொண்ட அழகு மாளிகை தெரியுமா? என் அழகுக்கு அழகு சேர்த்த முற்றத்துப் பூந்தோட்த்தையும் மேற்றளத்துப் பூந்தொட்டிகளையும் மறக்கமுடியுமா?

6. கனகவேல் குடும்பத்தவரது நண்பர்கள் என்னழகைப் பார்த்து பிரம்மித்து நிற்கிற பொழுது எனக்குள் நான் பெருமைப்பட்டுக் கொள்வேன்.

7. கனகவேலின் மகன் இராசவேலின், வெள்ளை நிற அழகான பொமேரியன் நாய்குட்டியான யூலி கத்திக் கத்தித் துள்ளித் திரிகையில் அதன் சுட்டித்தனம் எனக்கு மிகவும் சிரிப்பைத் தரும் நான் அடக்கமுடியாமல் வாய்விட்டுச் சிரித்துக்கொள்வேன்.

8. இராஜ்கண்ணனின் பூனைக்குட்டியான பிறவுனியும் யூலியும் மிக ஒற்றுமையாக விளையாடி மகிழ்வதைக் கண்டு நான் அதிசயித்துப் போவதுண்டு.

9. ஒவ்வொருவருடமும் தமழ்ப் பண்டிகை நாட்களில் நான் புத்தெழில் பெற்று மிளிர்ந்தேன். கனகவேலின் பேரமக்கள் மேல் மாடியில் போடும் கூத்தில் உடல் சிலிர்த்துப் போவேன்.

10. இப்படியாக பதினைந்து ஆண்டுகள் கழிந்தன. 1995 ஒக்டோபரில் யாழ்மாவட்டத்தை யுத்த மேகம் சூழ்ந்து கொண்டது. குண்டு வீச்சு விமானங்கள் எமது பகுதிக்கு மேலாக வட்டமிடத் தொடங்கின. என்குடும்பத்தவர் நிலக்குழிக்குள் பதுங்கிக் கொண்டனர். இந்நிகழ்வு அடிக்கடி தொடர்ந்தது.

11. ஒரு நாள் நான் சற்றும் எதிர்பார்க்கவே இல்லை 'கிபிர்' குண்டு வீச்சு விமானங்கள் இரண்டு என்தலைக்கு மேலாக வட்டமிட்டன அதில் ஒன்று என்தலைக்கு நேராகப் பதிந்து

மூன்று குண்டுகளைப் படபட வென்று தள்ளிவிட்டு மேலெழுந்தது. நான் அதிர்ந்து ஆடிப்போய் பூமிமீது சரிந்தேன். கும்..கும்..கும் என்ற சத்தத்துக்கு மத்தியில் என். வளவு புகை மண்டலமாகக் காட்சியளித்தது.

12. என் குடும்பத்தவரை நிலக்குழி காப்பாற்றி விட்டது இதை எண்ணிப் பெரிதும் மகிழ்ந்தேன். இருப்பினும் என்னை நினைக்கும்போது எனக்கு அழுகை அழுகையாக வந்தது. நான் முழுவதுமாகச் சிதைந்து வெறும் கற்குவியலாகக் குவிந்திருந்தேன். என்இழப்பை என்னால் தாங்கிக் கொள்ள முடியவில்லை நினைத்து நினைத்துத் தேம்பித் தேம்பி அழுதேன்.

13. இந்நிகழ்வு முடிந்து ஆண்டுகள் பல கழிந்து விட்டன. இடம்பெயர்ந்து சென்ற என் குடும்பத்தவர் மீள வரவேயில்லை. புற்களும் புதர்களும் மண்டிய நிலையில் மனப்புழுக்கத்தோடு காத்திருக்கிறேன்.

14. இராஜ்பவனில் வாழ்ந்த இராஜாக்கள் என்ன ஆனார்கள், "கோலம் மாறிவிட்ட இராஜ்பவனைப் புனரமைக்க புது இராஜாக்கள் வருவார்களா?" கலக்கத்திலும் கண்ணீரிலும் என் வாழ்க்கை கரைகிறது.

*நுளம்பு ஒரு செக்கனுக்கு 500 தடவைகளுக்கு மேலாக தனது சிறகை அடிக்கிறது. பெரிய பறவைகள் செக்கனுக்கு ஒரு தடவையும் பாதித் தடவையும் சேர அசைக்கின்றன.*

*மரத்தவளை, தனது விரல்களுக்கு இடையில் காணப்படும் விரியக்கூடிய சவ்வின் உதவியுடன் 12மீ இற்கு மேலாக காற்றில் உயரப்பறந்து மரத்துக்கு மரம் தாவுகிறது.*

## புதிய விடுகதைகள்

*விடை அடுத்த இதழில். முன்பாக விடையளிக்க விரும்பும் மாணவர்கள் முடிவில் காணும் முகவரிக்கு விடையை எழுதி அனுப்புங்கள். பாராட்டைப் பெறும் மாணவர்களின் பெயர், தரம், பாடசாலை முகவரி அடுத்த இதழில் பிரசுரிக்கப்படும் விடையோடு அவற்றையும் குறிப்பிட்டு அனுப்புங்கள்.*

1) மண்ணில் நட்டால் மணி கொட்டும்
கண்ணில் பட்டால் வாயிலும் சேரும்
சத்தமிடா மணி சக்தி தரும் மணி. அது எது?

2) பார்த்தால் இரும்புக்குண்டு
பிளந்தால் சுவைக்கண் உண்டு
எகிறுபவர்களுக்கு எட்டாக்குண்டு
ஏறுபவர்களுக்கு எட்டும் குண்டு. ....எது?

3) வெயிலிலும் மழையிலும்
இன்பத்திலும் துன்பத்திலும்
ஒளியிலும் இருளிலும்
உடனிருப்பான் நண்பன்
உணவிட்டால் உண்ணான்
"சோப்பை" மட்டுமே உண்பான். அவன் யார்?

4) என் பணத்துக்கும் பொன்னுக்கும்
அவன் நல்ல காவல்க்காரன்
கடன் கேட்டால் கையில் பணம் வைப்பான்
வீட்டில் நிற்கமாட்டான் "றோட்டில்" நிற்பான். அவன் யார?

5) தலைப்பாகை கழற்றினால் கலை
வண்ணத்தை வடிப்பாள்
பெண்ணல்ல அவள் நாளும்
உன்னோடு கூட

அலுவலகம் வருவாள்
உரிய சமயத்தில்
உதவியும் புரிவாள் அவள்யார்?

6) கதிரொளி தொடாத கங்கை
கறந்த பாலில் இல்லாத வெள்ளை
களிமண்ணால் செய்யாத பாண்டம்
காற்று நுழையாத வீடு. அது என்ன?

7) எங்கள் வீட்டில் எலி
பூனையல்ல புலி வந்தாலும்
பயமுறாத ரிஷி
மின்னோடு விளையாடும் தனி. இது எது?

8) செப்புகுடம் நிறைய செம்முத்து
செந்தளிர் மேனிக்கு மாலையல்ல மணிமுத்து
செய்வோர்க்கு பணம் தரும் வள முத்து
செவ்வாயுள் முடியும் கனி முத்து. இது எது?

*தானியங்கிகளை உருவாக்கும் சீன நிறுவனம் ஒன்று காபனீரொட்சைட்டை உள்ளெடுத்து ஒட்சிசனை வெளிவிடும் சூரிய சக்தியில் இயங்குகிற கார் ஒன்றை வடிவமைத்து வெளியாக்கியுள்ளது.*



சூழலைமாசுபடுத்தாத கார்

சிறுவர் பாடல்

# தங்க நிலவு

நிலா பார் நிலா பார்!
நீல வானில் நிலா பார்!
நிதம் வந்து ஒளி சிந்தி
நினை அழைக்கும் நிலா பார்!

வெள்ளை முகில் மறைப்பதைப் பார்!
வெண்ணிலவு துடிப்பதைப்பார்
கொள்ளை அழுகு கொண்ட வானம்
பிள்ளைகள் நாம் மகிழத்தானே .


கார்முகில்கள் 'கார்' ஓட்டுது பார்!
காவிச் செல்ல நினைக்குதோ நிலவை!
தாவிச் செல்லுமோ தண்ணிலவு !
வா நிலவே! விளையாட
மண்ணில் நின்று வசதியாக.

அம்மா வா..! அமுது தா..! -என்
அம்மா முகம் தங்க நிலவு-ஓ
அம்மா என்னருகே இரு நிலவு
அகமகிழ்நதே யாடுகிறேன் உம்மாலே.

ஆக்கம்-சக்தி

சிறுகதை

# மரங்கொத்தியின் ஆய்வு



மரங்கொத்தி ஒன்று விளையாட்டு மைதானம் ஒன்றின் மீதாக, பறந்து வந்து மைதானத்தின் மூலையில் நின்ற பனை மரத்தண்டின் மீது அமர்ந்து தண்டைக் கொத்துகிறது. அதன் முதுகில் ஒரு சிறிய பை தொங்கிக்கொண்டிருந்தது. மரங்கொத்தும் சத்தத்தைக் கேட்டு மைதானத்தில் பட்டம் விட்டுக் கொண்டிருந்த சிறுவர்களில்

ஒருவன் மேலே பார்த்து "ஏய்..மரங்கொத்தியாரே..! நீ என்ன செய்கிறாய்..?" என்று கேட்டான். "நான் மரங்களிலிருந்து வைரங்களின் மாதிரிகளைச் சேகரித்து அவற்றின் உறுதித் தன்மையைப் பற்றி ஆராய்ச்சி செய்கிறேன்" என மரங்கொத்தி பதிலளித்தது. சிறுவன் கேட்டான் "எதற்காக இந்தஆராய்ச்சி?" மரங்கொத்தியோ "அதுவா.... பொழுது போகவில்லை, அதனால் தான்...இவ்வேலை" என்றது. சிறுவன் " சரி..வேறு ஏதும் ஆய்வு செய்யவில்லையா..சொல்லும் எனக்குப் பிடித்திருந்தால் நானும் உன்னோடு சேர்ந்து கொள்கிறேன்" என்றான்.

மரங்கொத்தி "வானியல் ஆராய்ச்சியில் ஈடுபட எனக்கு ஆசைதான் ஆனால் அதற்கு இப்போது நேரமில்லை அதற்கான சாதனங்களுமில்லை, நேரம் வரும்போது சொல்கிறேன்.விரும்பினால் இணைந்து கொள்ளும்." என்று கூறிவிட்டுத் தனது வேலையைத் தொடர்ந்தது.

சிறுவர்கள் விட்டுக் கொண்டிருந்த பட்டம் மேலே கிளம்பிவிட்டது. அவர்கள் மகிழ்ச்சியில் குதித்து ஆரவாரம் செய்தனர். ஒன்றுக்குப்பின் ஒன்று தொடுத்து விடுவதற்கு இருபது பட்டங்கள் கொண்டுவந்து வைத்திருந்தனர். முதலில் மேலே விட்ட பட்டத்தின் நூலில் அடுத்ததை இணைத்து மேலே விடத்தொடங்கினர். மேலே விடும் பட்டங்களின் எண்ணிக்கை அதிகரிக்க அதிகரிக்க நூலில் உதைப்பும் அதிகமாகிக் கொண்டு வந்தது.ஆறு ஏழு பேர்களாகச் சேர்ந்து நின்று பிடித்தார்கள்.

மரங்கொத்திக்கு வேலை ஓடவில்லை, சிறுவர்கள் பட்டம் தொடுப்பதில் கவனம் திரும்பியிருந்தது. "அப்படி என்னமா வில்லங்கப்படுகிறார்கள்.......பொழுது போகவில் லையென்றால், இப்படியா......? " என்று மரங்கொத்தி தனக்குள் சிரித்துக்கொண்டது.

சற்று நேரத்தில் ஒன்றிரண்டு மழைத்துளிகள் நிலத்தில் விழத்தொடங்கின. சிறுவர்களுக்குச் சீ.... என்று

இருந்தது. " இப்பதானே ஏற்றிக்கட்டினோம். அதற்குள் மழை வருகிறதே " எனப் பட்டத்தின் சொந்தக்காரச் சிறுவன் சலித்துக் கொண்டான். மற்றவர்கள் பட்டத்தைக் கீழே இறக்க ஆயத்தமானார்கள்.

மரங்கொத்தியும் தனது பையைத் தன்னோடு சேர்த்து இறுகக்கட்டிக் கொண்டு தன் இருப்பிடம் செல்ல ஆயத்தமானது. யாரும் எதிர்பார்க்கவில்லை பெரும் காற்று "ஊ...ஊ.. " என்று இரைந்தபடி எங்கிருந்தோ கிளர்ந்து வந்தது. மரங்களை ஆட்டி அசைத்துப் பலம் பார்த்தது.

தனது இருப்பிடம் நோக்கிப் பறக்க முயன்ற மரங்கொத்தி காற்றை எதிர்க்க முடியாமல் காற்றின் திசையில் அங்குமிங்குமாக அலைந்தது. பட்டங்களோ வாலை அசைத்து மேலும் கீழுமாக ஆட்டம் போட்டன. சிறுவர்கள் இன்னும் பலர் சேர்ந்து பட்டங்களைக் கீழே இறக்க முயற்சித்துக் கொண்டிருந்தனர். திடீரென்று கடைசியில் நின்ற பட்டங்கள் சில சுழலத்தொடங்கின. சுழன்று சுழன்று காற்றில் மிதந்து கொண்டு எங்கோ சென்றன. சிறுவர்கள் கத்திக்கொண்டு அறுந்து செல்லும் பட்டங்களை நோக்கி ஓட்டம் பிடித்தனர்.

காற்றில் அலைந்து கொண்டிருந்த மரங்கொத்தி அறுந்த பட்டங்களின் நூலில் சிக்கிக் கொண்டது. மரங்கொத்தியால் தனது சிறகுகளை அசைக்க முடியவில்லை. எப்படி முயன்றும் தனியாகப் பறக்க முடியவில்லை. அறுந்த பட்டங்கள் அதனை இழுத்துச் சென்றன. " ஐயனே! இதுவா விதி... " என்று விதியை நொந்து கொண்டு அடுத்தது என்ன நிகழப் போகிறதோ...! என ஏக்கத்தில் தத்தளித்தது.

இந்த அவலம் தொடர்ந்ததால் குருவி உடல் வலியால் துடித்தது. சிறிது நேரம் கழிந்தது. திடீரென்று அறுந்த பட்டங்கள், நூலில் உறுதியாகப் பறக்கத்தொடங்கின. என்ன நடந்திருக்கும் என்று எண்ணிப்பார்க்க மரங்கொதியால் முடியாது

ஏனெனில் குருவி வானில் அந்தரத்தில் தொங்கிக் கொண்டிருந்தது. அதன் இறக்கைகள் காயப்பட்டு இரத்தம் கசியத் தொடங்கியிருந்தன. " எப்படியோ நான் கீழே விழுந்து இறந்து விடப்போகிறேன்....இதுதான் எனது கடைசி நிமிடங்கள்..... " என்று எண்ணிக்கொண்டு கீழே பார்த்தது. கீழே ஒரு நீர் நிலை தென்பட்டது. அவ்விடம் சிறு குளமாக இருக்கலாம்......... குருவியால் மேலும் யோசிக்க முடியவில்லை, அறிவு மயங்கிப் பிணம்போல் தொங்கியது. அறுந்த பட்டங்களைத் தொடுத்திருந்த நூலின் சுயாதீன முனை மரமொன்றின் கிளைகளில் சிக்கிப் பட்டங்கள் நிலையாகப் பறக்கத் தொடங்கியிருந்தன. இதனாலேயே குருவிக்கு இந்த நிலை.

இப்போ மழை பொழியத் தொடங்கியது. பட்டங்கள் நிலத்தை நோக்கி வந்து கொண்டிருந்தன. தொடர்ந்து மழை கொட்டோ கொட்டென்று கொட்டியது. எவ்வளவு நேரம் கழிந்ததோ தெரியாது. மரங்கொத்தி கண் விழித்துப் பார்த்தது. தண்ணீரில் மிதந்து கொண்டிருக்கும் விறகுக்குச்சிக் கட்டின் மீது, தான் கிடப்பதை உணரந்தது. " ........இறைவா..நான் உயிர் தப்பி இருக்கிறேன்! எத்தகைய அதிஷ்டத்தை எனக்கு அளித்திருக்கிறாய்.....உன் கருணை இந்தளவு பெரியதா?.... " என்று கடவுளின் கருணையை நினைத்து தனக்குள் உருகியது. இருப்பினும் இறக்கைகள் புண்ணான நிலையில் இந்நீர் நிலையிலிருந்து எவ்வாறு தப்பிச் செல்வது என யோசித்தது. தலையை நிமிர்த்திச் சுற்றும் முற்றும் பார்த்தது.

"கலோ! மரங்கொத்தியாரே....." என்று ஒரு குரல் கேட்டது. குருவி குரல் வந்த திசைக்குத் தலையைத் திருப்பிப் பார்த்தது. முயல்ப்பிள்ளை ஒன்று தனது கணணிப் பையை நெஞ்சோடு அணைத்தபடி வீட்டின் கூரையின் மீது நின்று கொண்டிருந்தது. மீண்டும் முயல் கேட்டது "மரங்கொத்தியாரே நீர் எங்கே போகிறீர் " எனறு. அக்கேள்விக்கு குருவி பதிலளிக்க

வில்லை. " நீர் ஏன் குளத்துக்குள் வீடு கட்டி இருக்கிறீர்? " என்று முயலைக் கேட்டது. அதற்கு முயல் " நான் குளத்துக்குள் வீடு கட்ட வில்லை, குளம்தான் எனது வீட்டுக்குள் வந்துவிட்டது. மூன்று நாட்கள் தொடர்ந்து பெய்த மழையால் ஊருக்குள் வெள்ளம் புகுந்துவிட்டது நீர் என்ன நித்திரையா கொண்டீர்? " என்றது. " அதுவா நான் செத்துப் பிழைத்து வந்திருக்கிறேன். அந்தக்கதையைப் பிறகு கூறுகிறேன். என் உடல் குளிரால் நன்கு விறைத்துக்கிடக்கிறது. இறக்கைகளும் புண்ணாகிக் கிடக்கின்றன. பசி வேறு வாட்டுகிறது. என்னை இந்த நீருக்கு வெளியே கொன்டு செல்ல உம்மால் முடியுமா? "என்றது குருவி. "ஓ செலல்லாமே " என்று முயல்கூறிவிட்டு கூரையின் மீது இருந்த தனது பிளாஸ்டிக்காலான சாப்பாட்டுத்தட்டை நீரிலிட்டு அதன் மீது ஏறிக்கொண்டது. மரத்தினாலான அகப்பையை துடுப்பாகப் பயன்படுத்தி நீரைத் தாங்கிக் கொண்டு குருவியின் அருகில் போய்ச் சேர்ந்தது. குருவி மிதந்து கொண்டிருக்கும் விறகுக் குச்சி ஓடத்தின் மீது தானும் ஏறிக்கொண்டது. தனது துடுப்பினால் தண்ணீரைத் தாங்கி குருவியைக் கரைக்குக் கொண்டு வந்து சேர்த்தது. தனது சட்டைப் பையிலிருந்து கைக்குட்டையை எடுத்து குருவியின் மீது போர்த்திவிட்டது. அருகிலிருந்த மரத்திலிருந்து பழங்களைப் பறித்து குருவி உண்பதற்காய் கொடுத்தது.

''எப்பொழுதும் ஒரு பையை உம்மோடு கூடவைத்திருக்கிறீரே அதற்குள் என்ன இருக்கிறது? " எனக் குருவி முயலைக்கேட்டது. அதற்கு முயல் " இதுவா... நான் மடியில் வைத்துப் பயன்படுத்தும் கணனி. நான் படிப்பது விளையாடுவது பொழுது போக்குவது எல்லாம் இதனோடுதான். வீட்டுக்குள் வெள்ளம் புகுந்துவிட்டதால் இதைத்தூக்கி வைத்துக்கொண்டு கூரைமீது நிற்கிறேன். என்று பதிலளித்தது முயல். " உனக்குப் பொழுது போக்க வேறு வழியில்லையா" என்று கேட்டது குருவி.

முயல் " நான் வெளியில் செல்வது குறைவு எனது அதிகமான நேரத்தை வீட்டக்குள்தான் கழிக்கிறேன். அதனால் இப்பொழுது போக்கு வசதியாக இருக்கிறது. என்னை வளர்க்கும் வீட்டுக்காரர்கள், எல்லா வசதியையும் தந்திருக்கிறார்கள். வெள்ளம் காரணமாக அவர்கள் பக்கத்து ஊருக்கச் சென்று விட்டார்கள்." என்றது.

இரண்டு நாட்கள் முயலுடன் தங்கியிருந்த மரங்கொத்திக்கு இப்பொழுது உடல் நிலை சற்றுத்தேறி அது பழைய நிலைக்குத்திரும்பிக் கொண்டிருந்தது. அது முயலைப் பார்த்து "நீர் செய்த உதவியை ஒரு பொழுதும் மறக்க முடியாது. என்னால் உமக்கு எந்த உதவியும் தற்சமயம் செய்ய முடியவில்லையே என்று எனக்குக் கவலையாய் உள்ளது. நீர் எந்த உதவியை நாடினாலும் நான் செய்யத் தயாராக இருக்கிறேன். நீர் உமது வீட்டை விட்டு வெளியில் வந்து உலகைச் சுற்றிப் பார்க்கலாம் அல்லவா..." என்று கேட்டது. முயலோ "அப்படியெல்லாம் என்னால் முடியாது...நான் என்னை வளர்த்தவர்களுடனேயே இருப்பதுதான் எனக்குப் பிடித்திருக்கிறது. இந்தக் கணணியினூடாகவே இவ்வுலகத்தைப் பார்த்து எனக்குப் பழகிவிட்டது. நான் இங்கேயே இருந்துவிடுகிறேன். நீர் இன்னும் சில நாட்களுக்கு என்னுடன் தங்கமுடியுமா? " என்றது. குருவி " எனக்குச் சுற்றித்திரிவதுதான் பிடித்திருக்கிறது. இயற்கையோடு வாழ்வது, இயற்கையை இரசிப்பது, இயற்கையை அனுபவிப்பது இவைதான் எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது. நாம் பிரியும் நேரம் வந்துவிட்டது. நான் இப்பொழுது பிரிந்து செல்கிறேன் மீண்டும் சந்திக்கும் அதிஷ்டமிருந்தால் சந்தித்துக் கொள்வோம்." என்று கூறி முயலின் கரங்களைப்பற்றிக் குலுக்கிவிட்டுப் பறந்து சென்றது.

ஆக்கம்: சக்தி

கட்டுரை

## நான் கண்ட காலைக் கடற்கரை

நீலக்கடலின் எல்லையில் வானத்திற்குக் குங்குமப்பொட்டு வைத்தது போல் அடிவானில் சூரியன் சிவப்பாய் ஒளிர்ந்தான். கடலின் மீது வெள்ளலைகள் கரையைத் தொடவெனப் போட்டி போட்டு ஓடி வந்துகொண்டிருந்தன. குளிர்ந்த காற்று போர்வையை விலக்கி உடலைச் 'சில்' என்று குளிர வைத்தது. அதிகாலையின் அமைதியைக் கலைத்துக்கொண்டு, கடற்கரை மரங்களில் வாழ்ந்த காக்கை குருவிகள் கத்திப்பறந்து ஆரவாரித்தன. வீடுகளில் நித்திரை விட்டெழுந்த மனிதர்கள் நடமாடுகின்ற சத்தங்கள் மெல்ல மெல்ல எழுந்தன. கடலின்மீது கரையை நோக்கி வந்துகொண்டிருக்கும் படகுகள் ஒன்றிரண்டு தென்பட்டன. அந்தப் படகுகளில் சென்றவர்களுக்கு உணவு, தேநீரைக் கொடுத்துக் களைப்பாற்றுவதற்காக அவர்களது மனைவியோ மகளோ கடலை உற்று நோக்கிய வண்ணம் கடற்கரை மணலில் அமர்ந்திருந்தனர்.

சற்று நேரம் கழிந்தது. சூரியன் பொற்குடம் போல் மின்னினான். கடலோ பொற்கம்பளம் விரித்தது போன்று 'ஜெக ஜெக' என மினுமினுத்தது. தொழிலுக்காகச் சென்ற படகுகள் எல்லாம் கரைக்குத் திரும்பிக் கொண்டிருந்தன. இயந்திரப்படகுகளின் இரைச்சல் காதை அடைத்தது. பாய்மரங்கள், தோணிகளும் சில வந்துகொண்டிருந்தன. கரையில் வந்திறங்கிய தொழிலாளர் பலரது முகங்களில் மகிழ்ச்சி பொங்கியது. சிலரது முகங்கள் வாடியிருந்தன. மீன்கள் அதிகம் கிடைக்கவில்லை என்றதினாற் போலும். கரை வலை இழுப்பவர்கள் ஒருவர் பின் ஒருவராக நிரையாக நின்று கொண்டு கரையை நோக்கி வலையை இழுக்கிறார்கள். தமது உடல் இயங்கும் தாளத்திற்கேற்ப பாடல்களைப் படிக்கிறார்கள். இவ்வாறு கரை வலை இழுப்பவர்கள் பாடும்பாட்டு "அம்பப்பாட்டு" எனச் சொல்லப்படுகிறது. கடல்த்தாய் தனது மைந்தர்களுக்காக வலை மடிநிறைய மீன்களை அள்ளிக் கொடுத்திருப்பதைக் காணும்போது கடலன்னையின் கருணையை எண்ணி மனம் நெகிழாமல் இருக்க முடியவில்லை.

கடற்கரையில் இப்பொழுது சனக்கூட்டம் நிறைந்து விட்டது. உணவைப் பகிர்ந்து கொள்பவர்களும் வேலை செய்பவர்களும் வியாபாரிகளுமாக சத்தம் அதிகமாகி இருந்தது. காகங்கள் மீன்களைக் கொத்திச் செல்வதற்காக வலைகளுக்கு மீதாகவும் மீன் கூடைகளுக்கு மேலாகவும் பறந்தன. அயலில் வாழும் தெரு நாய்கள் படகுகளுக்கிடையாகவும் கூடைகளுக்கிடையாகவும் மீன்களைக் காவுவதற்காகப் பாய்ந்து திரிந்தன. கருவாடு இடுவதற்கான மீன்களை ஆண்களும் பெண்களுமாகக் காயவிடத் தொடங்கினர்.

கடற்கரை ஓரமாகச் செல்லும் பிரதான வீதி மிகவும் இரைச்சலடைந்தது. மீனைக் கொள்வனவு செயவதற்குப் பெரிய பெரிய வெளியூர் வியாபாரிகள், குளிரூட்ட முடிந்த தமது பார ஊர்திகளுடனும் வாகனங்களுடனும் வந்திறங்கினார்கள். உள் ஊர் வியாபாரிகள், பெட்டி கட்டிய தமது துவிச்சக்கர வண்டிகளுடனும் மோட்டர்ச் சைக்கிள்களுடனும் வந்திருந்தனர். அவர்கள் மீனை வாங்கிக் கொண்டு தமது வாகனங்களின் ஒலியெழுப்பியை அமுக்கிக் கொண்டு காற்றிலும் வேகமாய்ப் பறந்தனர். பள்ளிக்குச் செல்லாத சிறுவர் சிலர் மீன்களைத் தெரிவு செய்வதிலும் கரைவலை இழுப்பதிலும் ஈடுபட்டிருந்தமை என் கவனத்தை ஈர்த்தது. ஏன் இவர்கள் தமது பாடசாலைக் கல்வியை இடை நிறுத்தினார்கள்? என்ற கேள்வி விடை அறிய முடியாமல் என் மனம் முழுவதும் வியாபித்திருந்தது.

சூரியன் வானின் உச்சியை நோக்கி நகர்ந்து விட்டான் வெயில் சுளீரென்று தோலை எரிக்கிறது. பிரகாசத்தின் மிகுதியால் கடல் கண்ணைப்பறிக்கிறது. சுடுமணல் தொழிலாளரின் கால்களைக் காய்ச்சத் தொடங்குகிறது. அவர்களின் உடலில் இருந்து வியர்வை வழிகிறது. அவர்கள் தமது வேலைகளை வேகமாக முடித்துக் கொண்டு நிழலை நோக்கி நகர்கிறார்கள். சிலர் வீடுகளுக்குச் செல்கிறார்கள். கடற்கரையில் ஆளரவம் குறைகிறது. கடல்அமைதியாகக் காணப்படுகிறது. கரைக்கு மிகத்தூரமுள்ள ஆழ்கடலில் கடற்படைக் கப்பல் ஒன்று மட்டும் தென்படுகிறது.

-சக்தி

## *சுருக்கம்* எழுதும் பொழுது கவனிக்க வேண்டியவை

1) சுருக்கம் எழுதுவதற்காகக் கொடுக்கப்பட்ட உரைப்பகுதியினைப் பலமுறை வாசித்து அதன் பிரதான கருத்தினைக் குறித்துக்கொள்ளல்.

2) சுருக்கம் எழுதுவதற்குக் கொடுக்கப்பட்டபகுதி பல பந்திகளைக் கொண்டு அமைந்திருப்பின் ஒவ்வொரு பந்தியிலும் உள்ள பிரதான கருத்துக்களை அல்லது ஒவ்வொரு பந்திக்கும் ஒவ்வொரு தலையங்கத்தைக் குறித்துக் கொள்ளல் அவசியம்.

3) சுருக்கம் எப்பொழுதும் மாணவர்களின் சொந்த உரை நடையில் அமைதல் வேண்டும். சில சந்தர்ப்பங்களில் மூல உரை நடையில் உள்ள சொற்கள் சொற்றொடர்களைப் பொருத்தம் கருதிச் சுருக்கத்தில் சேர்த்துக் கொள்ளலாம்.

4) சுருக்கத்தினை ஒரே பந்தியில் எழுதுதல் வேண்டும்.

5) சுருக்கம் எழுதும் போது சுருக்கத்திற் கையாளப்படும் உரைநடை தெளிவாகவும், இலக்கண அமைதி யுடையதாகவும் அமைய வேண்டும் என்பதைக் கவனத்திற் கொள்ளல் வேண்டும்.

6) சுருக்கத்தை வாசிக்கும் பொழுது மூல உரை நடையின் பிரதான விடயங்கள் அனைத்தையும் அறிந்து கொள்ளக் கூடியதாக இருத்தல் வேண்டும்.

7) உரையாசிரியர் தமது கருத்தினை வலியுறுத் துவதற்காக அல்லது சுவை படச் சொல்வதற்காகப் பல வழிமுறைகளைக் கையாண்டிருக்கலாம். அவற்றைச்

சுருக்கி ஒரு சொல்லில் எழுதுதல் அவசியம். உதாரணமாக நகைச் சுவை கருதி சில கருத்துக்களை எழுதியிருக்கலாம். அவற்றைச் சுருக்கி இவ்விடயத்தை நகைச்சுவைபடக் குறிப்பிடுகிறார்.என்று எழுதலாம்.

## சுருக்கம் எழுதும் பொழுது தவிர்க்கப்பட வேண்டிய விடயங்கள்

1) சுருக்கத்திற்காகக் கொடுக்கப்பட்டிருக்கும் உரைப்பகுதியைப் பல முறை வாசித்து அதில் உள்ள அவசியமற்ற விடயங்களைத் தவிர்த்தல் வேண்டும்.

2) சில விடயங்களை விளக்கமாகக் கூறுவதற்காகப் பல வர்ணனைகளை உரைநடை ஆசிரியர் கையாண்டிருக்கலாம். சில விடயங்கள் கூறியது கூறலாய் அமையலாம். அவற்றைத் தவிர்த்தல் வேண்டும்.

3) உவமை உருவகம் போன்ற அணிகள் பலவற்றைப் பயன்படுத்தி இருக்கலாம். இவ்வாறான விடயங்களை வாசித்தறிந்து அவற்றினைச் சுருக்கத்திலிருந்து விலக்க வேண்டும்.

4) சுருக்கி எழுதும் போது தமது சொந்தக் கருத்துக்களை எழுதுவதைத் தவிர்க்க வேண்டும்.

5) விதிக்கப்பட்ட சொற்களை விட அதிகமாக அல்லது குறைவாக எழுதுவது கூடாது. ஆயினும் விதிக்கப்பட்ட சொற்களை விட பத்துச் சொற்கள் கூடுதலாகவோ அல்லது குறைவாகவோ அமையலாம்.


6) சுருக்கத்தைத் தமது சொந்த உரை நடையில் எழுதும் போது அது மூல உரைநடையின் தரத்திற்கு

ஏற்றவகையில் அமைய வேண்டும். எந்த விதத்திலும் அச் சுருக்கத்தின் தரம் குறைந்து விடக்கூடாது.

7) மூல உரைநடையில் தன் கூற்றாய் அமைந்த பகுதியை மாற்றிப் பிறர் கூற்றாய் எழுதுதல் வேண்டும்.

8) சுருக்கத்திற்காகக் கொடுக்கப்பட்ட மூலப்பகுதியில் செய்யுள்கள் இடம்பெற்றிருந்தால் அவற்றை அப்படியே எழுதுவதைத் தவிர்த்து செய்யுளின் பொழிப்பைச் சுருக்கி வசன நடையில் எழுதுதல் வேண்டும்.

9) சுருக்கம் எழுதும் போது மூலப்பகுதியில் உள்ள தன்மை, முன்னிலைச் சொற்களைத் தவிர்த்து அவற்றைப் படர்க்கையில் எழுதுதல் வேண்டும்.



*இயற்கையும் அழகும் நோய் நீக்கும் மருந்து*
*மனதை வருடும் மலர்ச் செண்டு*

## வளி மாசடைதலும் அதைத் தவிர்க்கக் கூடிய யுக்திகளும்

பூமியினுடைய வளிமண்டலம் இயற்கையாகவும் செயற்கையாகவும் மாசு படுத்தப்படுகிறது.

இயற்கை நிகழ்வுகளாகிய எரிமலை வெடிப்பு, மணல்ப் புயல் ஆகியவை வளிமண்டலத்தை இயற்கையாக மாசு படுத்து கின்றன.

ஆனால் மக்கள் சமூகத்தாலேயே அதிக ஆபத்தான வகையில் வளியானது மாசடைந்து வருகிறுது.

தொழிற்சாலைகள், மின்னிலையங்கள், வாகனங்கள் என்பன வளியினுள் வெளித்தள்ளுகின்ற கெடுதி விளைவிக்கும் வாயுக்கள் புவி, உஷ்ணமடைவதற்கும் புவியில் அமில மழை உருவாகுவதற்கும் ஓசோன் படலம் அழிவடைவதற்கும் பெரும் பங்காற்றுகின்றன.

மேலும் வளி மாசடைதல் சுவாசப் பிரச்சனைகள் சம்பந்தமான நோய்கள் ஊருவாகக் காரணமாகின்றன.

சத்தத்தால் வளி மாசடைகிறது. உரத்த சத்தங்கள் மக்களுக்கு தொந்தரவு கொடுப்பது மட்டுமல்ல கேட்கும் திறனையும் பாதிப்படையச் செய்கின்றன.

சத்தத்தை அளக்கும் அலகு டெசிபல் ஆகும். மனிதனின் காதுகளால் கேட்கக்கூடிய ஆகக்குறைந்த அளவு பூச்சியம் டெசிபல் ஆகும்.

160 டெசிபல் சத்தம், அல்லது மிகவும் கிட்டிய பிரதேசத்தில் ஜெற் விமானம் புறப்படுகின்ற சத்தம் மனிதனது

கேட்கும் திறனுக்கு ஊறு விளைவிக்கின்றதாக அமைகிறது.

வளி மாசடைவதைதத் தடுப்பதற்கு இலகுவான தீர்வு இல்லை. ஆனால் மக்கள், தொழிற்சாலைகள்.வாகனங்கள் மின்னிலையங்கள் என்பவற்றிலிருந்து வெளியேறும் கெடுதி மிக்க வாயுக்களைக் குறைப்பதன் மூலம், சக்தியைச் சேமிப்பதன் மூலம் அல்லது மீதப்படுத்துவதுன் மூலம் வளி மாசடைதலைக் குறைக்க முடியும்.

மில்லியன் கணக்கான மக்கள் வாழ்கின்ற, வேலை செய்கின்ற, கார், பஸ் லொறிகள் பயணம் செய்கின்ற மிகப் பெரிய நகரங்களின் மேலாக வளி மாசடைதல் என்பது மிக மோசமடைந்துள்ளது. தொழிற்சாலையின் புகைப் போக்கிகள் வளி மாசடைதலைக் குறைக்கின்ற உபாயங்களுடன் அமைக்கப்படலாம். ஆனால் அது மிகவும் செலவு கூடிய விடயமாக உள்ளது. மக்களின் போக்குவரத்துச் சாதனங்கள் மேம்படுத்தப் படுமானாலும், நகரங்கள், மாநகரங்களில் துவிச் சக்கர வண்டிப் பாதைகள் உபயோகிக்கக் கூடிய விதமாக இருந்தாலும், மக்கள் தங்களுடைய கார்களைப் பாவிக்கும் சந்தர்ப்பங்கள் மிகவும் குறைவாக இருக்குமானாலும்தான் தொகையாகக் காணப்படுகின்ற வளியில் கலந்துள்ள மாசினைக் குறைக்க முடியும்.

### எரிமலை மாசு

எரிமலை வெடித்து வெளித்தள்ளுகிற பொழுது மிகவுயரமான விண் பிரதேசத்துக்கு தூசியானது வெடித்து வேகமாப் பரவிச் செல்கிறது. அது பல வாரங்களாகக்கூட உலகைச் சுற்றிக் கொண்டு செல்லப்படுகின்றது. இது காலநிலை வலையத்துக்கு மேலாக நிகழ்வதால் மழையால் கழுவப்படக்கூட மாட்டாது. கடைசியில் இது சில வருடங்களின் பின் பூமியில் விழும்.

## சிகரட் புகையிலை புகைத்தல்

ஒருவர் எவ்வளவுக் கெவ்வளவு சிகரட் புகைக்கிறாரோ அவ்வளவுக் கவ்வளவு அது அவரது உடல் நலத்திற்குக் கேடு விளைவிக்கிறது. 'கான்ஸ்சர்' நோய்க்கான காரணியாக அமையும் இரசாயனப்பதார்த்தம் சிகரட் புகையில் காணப்படுகிறது. இக்காரணி இரத்தத்துக்குள் ஒட்சிசன் எடுத்துச் செல்லப்படுவதைத் தடுக்கிறது. இப்பொருள் 'நிக்கொட்டின் ' என அழைக்கப்படுகிறது. இது சிகரட் புகையைச் சுவாசிப்பவரின் உடலில் குருதி அமுக்கத்தை உயர்த்துகிறது. அத்துடன் இதயத்துடிப்பின் வேகத்தையும் அதிகரிக்கிறது. "புகைத்தல் தடை செய்யப்பட்டுள்ளது " என அறிவிக்கப்பட்டுள்ள பகுதிகளில் இத்தகைய மாசு குறைக்கப்படுவதுடன் சிகரட் புகைப்பவர்களிடமிருந்து சிகரட் புகைக்காதவர்களைப் பாதுகாக்கிறது.

*கட்டுரை*

## *மரங்கள் மனிதர் வாழ்வுக்கு ஆதாரம்*

*மண்ணில் காணப்படும் உயிரினங்கள் இரண்டு பெரும் பகுதிகளாகப் பிரிக்கப்படுகின்றன.*

1) *தாவரங்கள்*
2) *விலங்குகள்*

*மரங்கள் தாவர வகைக்குள் அடங்குகின்றன. தாவரங்களிலும் தாழ்தாவரங்கள், உயர் தாவரங்கள் என இரண்டு பிரிவுகள் உண்டு.*

*மரங்கள், செடி, கொடிகள் உயர் தாவர வகைக்குள் அடங்குகின்றன. இவை சூரிய சக்தியைப் பயன்படுத்தி ஒளித்தொகுப்பு மூலம் மாச்சத்தைத் தயாரிக்கின்றன. இதனால் இவை விஞ்ஞான ரீதியில் உற்பத்தியாக்கிகள் என அழைக்கப்படுகின்றன.*

*மரங்கள் பச்சை நிறமாய்இருப்பதும் சூரிய சக்தியை உணவாக மாற்றிக்கொள்வதும் விலங்குகளில் இருந்து இவற்றைப் பிரித்துக்காட்டும்*

பிரதான சிறப்பம்சங்களாகும். பல விலங்குகள் நேரடியாகத் தாவரங்களை உணவாக்கிக் கொள்கின்றன. அல்லாமலும் தாவரத்தை உண்ணும் விலங்குகளையே ஏனைய விலங்குகள் உணவாக்கிக் கொள்ள முடியும்.எனவே மனிதனுக்காயினும், விலங்குகட்காயினும் உணவுக்கு ஆதாரமாய் இருப்பது மரங்கள் உள்ளிட்ட தாவரங்களே.

அதுமட்டுமல்ல நாம் வாழுகின்ற பூமியின் மேற்படையான மண்ணுக்கும் இதுவே ஆதாரம். விவசாயக் கிராமங்களிலும் காடுகளிலும் மரங்களின் பகுதிகளே சேதனப்பசளையாகி மண்ணை வளப்படுத்துகின்றன. மேலும் மண்ணில் நேரடியாக விழும் சூரியக்கதிர்களைத் தடுப்பதன் மூலம் மண்ணின் ஈரத்தன்மையைக் காக்கிறது. இதனால் மண்ணை வளப்படுத்தும் மண்புழுவும் ஏனைய நுண்ணங்கிகளும் பாதுகாக்கப்படுகின்றன.

காடுகள் என்பது பலவிதமான மரஞ்செடி கொடிகளும் மிக அடர்த்தியாகக் காணப்படும் இடம். இவை விலங்குகளின் சரணாலயமாக அமைவதுடன் பூமியில் காற்றினாலும் மழையினாலும் விலங்குகளாலும் மண் அரித்துச் செல்லப்படுவதைத் தடுக்கின்றன. மலை நாடுகளில் மண்சரிவைத் தடுத்து மக்கள் குடியிருப்புக்களைப் பாதுகாப்பது அடர்ந்து காணப்படும் மரங்களேயாகும். பாலைவனங்கள் உருவாதலைத் தடுக்கவும் காடுவளர்ப்பே ஊக்கவிக்கப் படுகிறது. காடுகள், மரங்கள் பூமித்தாய்க்கு மிக இதமான, அழகான போர்வையாகும்.

அங்கிகள் வாழ்வதற்கு அத்தியாவசியமாக விளங்கும் கூறுகளாகிய பிராணவாயு, நீர், உணவு இவற்றைப் பெறுவதற்கு மரங்கள் மிகவும் துணை புரிகின்றன. மரங்களின் ஒளித்தொகுப்புச் செயற்பாட்டினால் வளியில் பிராணவாயு, கரியமில வாயுக்களின் சமநிலை பேணப்படுகிறது. காடுவளர்ப்பினால் அதிக மழையைப் பெற முடிகிறது. இதனனால் நிலத்தடி நீரைச் சேமிக்க முடிகிறது; நல்ல குடிநீரைப்பெற முடிகிறது. இவ்வாறு மனித வாழ்வுக்கு மிகவும் ஆதாரமாக விளங்குவன மரங்கள்.

இருந்தும் மக்கள் கண்மூடித்தனமாக மரங்களை அழிப்பதும் அழித்த இடங்களில் சீமெந்தினாலான கட்டடக்காடுகளை உருவாக்குவதும் ஏனென்று புரியவில்லை. இவ்வாறான செயல்களினால் மனித இனம் பல தீமைகளை அனுபவித்து வருவதையும் அவன் அறியாமல் இல்லை. ஆயினும் மரங்கள் மனித வாழ்வுக்கு ஆதாரமானவை என்பதை மீண்டும் மீண்டும் நினைவிற் கொள்வோம். மரங்களைப் பாதுகாப்போம் காடுகளை வளர்ப்போம்.

- சக்தி

# நன்றி

*அதிபர், ஆசிரியப் பெருந்தகைகளே! மாணவ மணிகளே!*

திசை முதல் இதழை, உமது இரு கரங்களில் ஏற்று எமக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்தமைக்கு கீழ்க்காணும் பாடசாலைகளைச் சேர்ந்த தங்களுக்கு எமது நன்றி அறிதலைத் தெரிவிக்கிறோம்.

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி
உடுப்பிட்டி பெண்கள் கல்லூரி
கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி
வல்வை மகளிர் கல்லூரி
இடைக்காடு மகா வித்தியாலயம்
வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரி
நெல்லியடி மிஷன் ஆரம்பப் பாடசாலை
வல்வெட்டித்துறை அரிய குட்டி ஆரம்பப் பாடசாலை
நவிண்டில் தாமோதரம்பிள்ளை ஆரம்பப் பாடசாலை
மூத்தவிநாயகர் வித்தியாலயம்
கரவெட்டி கிழக்கு ஆரம்பப்பாடசாலை
நெல்லியடி திரு இருதயக் கல்லூரி
வதிரி மிஷன் ஆரம்பப் பாடசாலை
யாக்கரை இந்து தமிழ்க் கலவன் பாடசாலை
மாதனை ஆரம்பப் பாடசாலை
தொண்டை மானாறு ஆரம்பப்பாடசாலை
வல்வெட்டி விநாயகர் வித்தியாலயம்
வல்வெட்டி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை
கொற்றாவத்தை தமிழ்க் கலவன் பாடசாலை
கம்பர்மலை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை
தேவரையாளி இந்துக்கல்லூரி
தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகாவித்தியாலயம்

திசை வெளியீட்டுக்குழு



சிறுகதை: மரங்கொத்தியின் ஆய்வு